**இயற்கை மரவள்ளி**





செம்மண், கரிசல் மண் ஏற்றது. மார்கழி, தை, மாசிப் பட்டம். ஏக்கருக்கு 10 டன் மகசூல் மழைக்கால மாலைப் பொழுது என்றால், ஆவி பறக்கப் பறக்கத் தட்டுகளில் பரிமாறப்படும் மரவள்ளிக் கிழங்குக்கு கிராமங்களில் முக்கிய இடமுண்டு. நேரடி உணவாக மட்டுமல்ல, ஸ்டார்ச், அப்பளம், கிழங்கு மாவு, ஜவ்வரிசி போன்றவை தயாரிக்கவும், இக்கிழங்கு மூலப்பொருளாகப் பயன்படுகிறது. குறைந்தளவு நிலம் உள்ளவர்களுக்கும் சிறந்த பலன் தரும் பயிராக இருப்பதால் கன்னியாகுமரி, தர்மபுரி, விழுப்புரம், நாமக்கல் உள்ளிட்ட பல மாவட்டங்களில் தொடர்ந்து மரவள்ளி கிழங்கு சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகள் நிறையவே இருக்கிறார்கள்.கன்னியாகுமரி மாவட்டத்தில், கேரள எல்லையோர நகரமான மார்த்தாண்டம் அருகே 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது, மருதங்கோடு என்ற ஊர். ஊர் முழுக்கவே மரவள்ளியும், ரப்பரும்தான் சாகுபடி செய்யப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் ரசாயன விவசாயம்தான், அவர்களுக்கிடையில் இயற்கை முறையில் மரவள்ளியை சாகுபடி செய்து வருகிறார்கள் அலெக்ஸாண்டரும், அவரது மனைவி குளோரியும்.

இயற்கை முறையில் நோய்கள் வராது !

“எங்க மாவட்டத்துல தென்னை, வாழைக்கு அடுத்தபடியா இருக்கிறது, மரவள்ளிதான். வெள்ளாமை பண்றதுக்கும் சரி, விற்பனைக்கும் சரி பெருசா அலட்டிக்கவே வேண்டியதில்லை, அதனாலதான் நான் மரவள்ளியை விடுவதேயில்லை. ஒரு ஏக்கர்ல செவ்வாழையும், அரை ஏக்கர்ல மரவள்ளிக் கிழங்கையும் சாகுபடி பண்ணிட்டிருக்கேன். பாலுக்காக நாலு கறவை மாடுகளையும் வைத்திருக்கிறேன்.ரசாயன விவசாயத்தில் நோய்த் தாக்குதல் அதிகமா இருந்தது. அதைக் கட்டுப்படுத்தவே முடியாது. அதனாலதான் நான் இயற்கை விவசாயத்துக்கு மாறினேன். இது ஓரளவுக்கு பலன் கொடுத்ததால, ஏழு வருஷமா முழுக்க இயற்கை விவசாயம்தான்” என்ற அலெக்ஸாண்டர் சாகுபடி பாடத்தைச் சொல்லகிறார்.

ரகங்கள் பல உண்டு !

“பச்சக்கொண்டான், கரியிலைப் பொரியன், நூறுமுட்டன், காந்தாரி கறுப்பன், கலிகாலன், அடுக்குமுட்டன், கோயில் வெள்ளை, சுந்தரி வெள்ளை என மரவள்ளியில் ஏராளமான நாட்டு ரகங்கள் இருக்கின்றன. ரகத்தைப் பொறுத்து பத்து முதல் பன்னிரண்டு மாதங்கள் வரை அறுவடைக் காலம் வேறுபடும். அந்தந்தப் பகுதியில் கிடைக்கும் ரகங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் (இவர் கரியிலைப் பொரியன் ரகததை நடவு செய்திருக்கிறார். இது பத்து மாதப் பயிர்).செம்மண், கரிசல் மண் போன்ற மண் வகைகளில் மரவள்ளி நன்கு வளரும். மார்ச் மற்றும் டிசம்பர் மாதங்கள் நடவுக்கு ஏற்றது. கரும்பைப் போல இதற்கும் விதைக் குச்சிகளைத்தான் (கரணைகள்) நடவு செய்ய வேண்டும். அதற்கு முன்பாக, நிலத்தை உழுது ஒரு டன் தொழுவுரத்தையும் 150 கிலோ சாம்பலையும் கொட்டி நிரவிவிட வேண்டும்.

மூன்றடி இடைவெளி!

விதைக் குச்சிகளை ஏழு இலைக்கணு அளவுக்கு வெட்டி வைத்துக்கொள்ள வேண்டும். பிறகு, மண்வெட்டியால் ஒன்றரை அடி ஆழத்துக்கு நிலத்தைக்கிளறி, கூம்பு வடிவில் மண்ணைக் குவித்து, அதில் விதைக் குச்சிகளை நான்கு கணுக்கள் மண்ணுக்குள் இருப்பது போல நடவு செய்ய வேண்டும். செடிக்குச் செடி வரிசைக்கு வரிசை மூன்றடி இடைவெளி தெவை. ஏக்கருக்கு 1,000 குச்சிகள் தேவைப்படும். கன்னியாகுமரி போன்ற அதிக மழைப்பொழிவு உள்ள பகுதிகள் என்றால், தண்ணீர் விட வேண்டிய அவசியமேயில்லை.

உரம், பூச்சிக்கொல்லி தேவையேயில்லை!

நடவு செய்து ஒரு மாதம் கழித்து சிம்புகள் முளைத்து வரும். ஆரேக்கியமான ஒரு சிம்பை மட்டும் விட்டுவிட்டு, மற்றவற்றைக் கிள்ளிவிட வேண்டும். 3 மற்றும் 6-ம் மாதங்களில் களையெடுக்க வேண்டும். பறிகு, நிலம் முழுக்க சாம்பலைப் பரப்பி விட வேண்டும். அப்போதுதான் சல்லிவேர் பரவாது. சல்லிவேர் வளர்ந்தால், கிழங்குக்கு சரியான விலை கிடைக்காது. அவ்வப்போது செடிக்கு அருகில் மண் இறுகாத அளவுக்கு தளர்த்திவிட வேண்டும். அப்போதுதான் கிழங்கு பருமனாக வளரும். வேறு எந்த உரமோ, பூச்சிக்கொல்லியோ தேவையில்லை.9-ம் மாதத்துக்கு மேல் கிழங்கு அறுவடைக்கு வந்து விடும். செடியின் அடிப்பகுதியில் மண்ணில் சிறிய வெடிப்புகள் தோன்றும். அதே சமயத்தில் செடியின் கீழ் பகுதியில் உள்ள இலைகள் பழுத்து உதிரத் தொடங்கும். மேல் பகுதியில் உள்ள இலைகள் சிறுத்துப் போவதோடு, பூக்கள் பூத்து, காய்களும் வைக்கத் தொடங்கும். இது தான் அறுவடைக்கான அறிகுறி!.

அரை ஏக்கரில் 5 டன் மகசூல்!

அரை ஏக்கருக்கு குறைஞ்சது 5,000 கிலோ ... அதிகபட்சமா 7,000 கிலோ கிழங்கு கிடைக்கும். இப்போதைக்கு கிலோ.. அதிகபட்சமா 7,000 கிலோ கிழங்கு கிடைக்கும். இப்போதைக்கு கிலோ பத்து ரூபாய்க்கு விற்பனையாகிறது. எவ்வளவு அதிகமான விளைச்சல் இருந்தாலும், கிலோ ஆறு ரூபாய்க்கு குறையாம விற்பனையாகும். குறைந்தளவு முப்பதாயிரம் ரூபாய்க்காவது விற்பனையாகும். செலவு போக அரை ஏக்கர்ல இருபதாயிரம் ரூபாய் லாபம் கிடைக்கும். நம்ம தோட்டத்துக்கே வந்து வியாபாரிங்க வாங்கிப்பாங்க. சில இடத்துல அவங்களே ஆட்களை வெச்சு அறுவடை பண்ணி எடை போட்டு காசைக் கொடுத்துட்டுப் போயிடுறாங்க. அதனால விற்பனையில் பிரச்சினையே இருக்காது.மரவள்ளி நட்ட மூணு மாதத்திற்குள் உளுந்து, சிறுபயிருன்னு எதையாவது ஊடுபயிரா போட்டு எடுத்துட்டா கூடுதல் லாபம் கிடைக்கும். அந்தப் பயிர்களோட கழிவுகளை மரவள்ளிக்கு மூடாக்காவும் போட்டுக்கலாம். அதனால களைகளும் வராது. மரவள்ளியைத் தனிப் பயிராகத் தான் பண்ணனும்னு இல்லை. நல்ல வெயில் கிடைக்கிற மாதிரி அமைந்திருக்கிற மரத்தோட்டங்கள்ல ஊடுபயிராவும் பண்ணலாம்.

மார்கழி, தை, மாசிப் பட்டம்!

சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகே இருக்கும் மஞ்சினி கிராத்தைச் சேர்ந்த பரமசிவம் பாசன முறையில், இயற்கை வழி விவசாயத்தில் மூன்று ஏக்கர் நிலத்தில் மரவள்ளி சாகுபடி செய்து வருகிறார். அவர் சொல்லும் ஒரு ஏக்கர் நிலத்துக்கான சாகுபடி பாடம் இதோ!எங்கள் பகுதியில் 'ஜெயா' என்கிற ரகம் பூச்சித் தாக்குதல் இல்லாமல் நன்கு வளர்கிறது. இது 11 மாதப் பயிர். பாசனமாக இருந்தாலும், நடவுக்குப் பின் மழை பெய்தால், மாவுப்பூச்சியின் தாக்குதல் குறைவாக இருக்கும். அதனால், மார்கழி, தை மாசிப் பட்டங்களில், மரவள்ளியை நடவு செய்யலாம்.நிலத்தைத் தேர்வு செய்து பல தானியங்களை விதைத்து, நாற்பது கழித்து பூ எடுத்த பின்னர் மடக்கி உழுதுவிட வேண்டும். பிறகு, 1 டன் தொழுவுரம், 2 கிலோ சூடோமோனஸ், 2 கிலோ டிரைக்கோடெர்மா விரிடி, 4 கிலோ அசோஸ்பைரில்லம் ஆகியவற்றை ஒன்றாகக் கலந்து நிலத்தில் பரப்ப வேண்டும். சொட்டுநீர் அமைத்துக் கொள்வது நல்லது. இல்லாதபட்சத்தில் தண்ணீர் பாயும் வாகுக்கேற்றவாறு பார் பிடித்து பாத்தி அமைத்துக் கொள்ள வேண்டும்.

விதை நேர்த்தி!

2 கிராம் சூடோமோனஸ், 2 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி, 4 கிராம் அசோஸ்பைரில்லம் மூன்றையும் 1 லிட்டர் தண்ணீரில் கலந்து அந்தக் கலவையில விதைக்கரணையை 2 நிமிடம் ஊற வைத்து எடுத்து, நடவு செய்ய வேண்டும். வரிசைக்கு வரிசை 4 அடி, செடிக்குச் செடி 2 அடி

இடைவெளி இருக்க வேண்டும். மண்ணின் ஈரப்பதத்தைப் பொறுத்து நீர் பாய்ச்சினால் போதுமானது. நடவு செய்த இருபத்தைந்து நாட்களுக்கு ஒரு முறை பஞ்சகவ்யா, அமுதக்கரைசல் இரண்டையும் 10 லிட்டர் தண்ணீருக்கு 300 மில்லி என்ற அளவில் கலந்து தெளித்து வர வேண்டும். களைகள் வளர்வதைப் பொறுத்து, அவற்றை நீக்கினால் போதுமானது. மாவுப்பூச்சி தாக்கினால், பெறிவண்டுகளை உபயோகப்படுத்தி கட்டுப்படுத்தலாம். 1 ஏக்கருக்கு, 12 பொறி வண்டு அட்டை போதுமானதாக இருக்கும். 11 மாதத்தில் அறுவடைக்குத் தயாராகி விடும்.

ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய்!

நிறைவாக பேசிய பரமசிவம், "ஏக்கருக்கு குறைந்தபட்சம் 10 டன்ல ஆரம்பித்து, அதிகபட்சமாக 20 டன் கிடைச்சுடும். இந்தப் பக்கம் 73 கிலோ அளவுல மூட்டை போட்டுதான் விற்பனை பண்றோம். கணக்கு பார்க்கும் போது, ஒரு கிலோ 5 ரூபாயில் இருந்து 10 ரூபாய் வரைக்கும் சீகனைப் பொறுத்து விற்பனையாகும். சாப்பிடுவதற்காக விற்பனை செய்தால், கிலோ 10 ரூபாய்க்கு, தினமும் 100 கிலோ வரை போகும். ஏக்கர் கணக்கில் பயிர் செய்பவர்கள் ஜவ்வரிசி தயாரிக்க மொத்தமாக கொடுத்துவிடுவோம். இப்போ கிலோ 5 ரூபாய் 50 காசுனு எடுத:துக்கிறாங்க. போன வருஷம் 9 ரூபாய்க்கு விற்பனையானது. 15 டன் மகசூல்னு வைத்துக்கொண்டாலே, கிலோ 5 ரூபாய் வீதம் கணக்குப் போட்டா 75,000 ரூபாய் கிடைக்கும். 25 ஆயிரம் ரூபாய் செலவு போக ஏக்கருக்கு 50 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கும்" என்று சொன்னார்.

| அரை ஏக்கரில் மரவள்ளி சாகுபடி செய்ய அலெக்ஸாண்டர் சொல்லும் செலவு -வரவு | | |
|---|---|---|
| **விவரம்** | **செலவு** | **வரவு** |
| விதைக்குச்சி | 300 | |
| உழவு, நடவு | 3,500 | |
| தொழுவுரம், சாம்பல் | 3,500 | |
| களையெடுக்க | 2,400 | |
| 5,000 கிலோ x ரூ 6 | | 30,000 |
| மொத்தம் | 9,700 | 30,000 |
| நிகர லாபம் | | 20,300 |

**தொடர்புக்கு :**

அலெக்ஸாண்டர், அலைபேசி : 96558 – 02555

பரமசிவன், அலைபேசி : 99430 - 91541